DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-1/2021

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.துரைமுருகன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

**(Accused absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)**

15.06.2026 – 11.50 AM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் குசவங்குளம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது ஊர்க்காரர் என்பதால் அவரை தெரியும். இவ்வழக்கில் இறந்து போன மூக்காண்டி அ.சா.1ன் தகப்பனார். இவ்வழக்கின் எதிரி செந்துாரானை விபத்து சம்பவத்தின் போது தெரியும். கடந்த 01.08.2016ம் தேதி பகல் 12,.00 மணியளவில் நான் கடலாடி செல்வதற்காக வாலிநோக்கம் விலக்கு பேருந்து நிறுத்ததில் நின்று கொண்டிருந்தேன். என்னோடு சுப்பிரமணியன் என்பவரும் பேருந்திற்காக காத்திருந்தார். அப்போது சாயல்குடியிலிருந்து அரசு பேருந்து வந்தது. அந்த பேருந்திலிருந்து நிறைய மக்கள் இறங்கினார்கள். அவர்களோடு அ.சா.1 மற்றும் மூக்காண்டியும் இறங்கி ரோட்டை கடந்து கொண்டிருந்த போது சாயல்குடியிலிருந்து சிக்கல் நோக்கி ஒரு இருசக்கர வாகனத்தை ஒரு நபர் வேகமாக ஓட்டி வந்து மூக்காண்டியின் மீது இடித்து விட்டார். அந்த வண்டியின் பதிவெண் TN 69 1819 ஆகும். மேலும் அது சிடி 100 மாடல் வாகனம் ஆகும்.

2. அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபர் மூக்காண்டியின் மீது மோதிவிட்டு அங்கிருந்து நிற்காமல் சென்று விட்டார். மூக்காண்டியின் மீது வாகனம் மோதியதில் அவர் துாக்கி வீசப்பட்டு அவருக்கு வலது கால் எழும்பு முறிவும், மூக்கில் ரத்தமும், பின்னந்தலையில் காயமும் இருந்தது. நானும்

அ.சா.1ம் என்னோடு இருந்த சில நபர்களும் ஓடிச்சென்று அவரை பார்த்தோம். அவர் சுயநினைவில்லாமல் இருந்தார். மேலும் அவர் அந்த இடத்திலேயே வாந்தி எடுக்க ஆரம்பித்து விட்டார். நாங்கள் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து ஆம்புலன்ஸ் மூலம் அவரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பின்னர் அவர் 5,6 நாட்கள் கழித்து மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டதாக கேள்விபட்டேன்.

3. அன்றைய தினம் விபத்து ஏற்படுத்திய நபர் ஆப்பனூரை சேர்ந்த செந்தூரான் என்று சம்பவ இடத்திலேயே அருகில் உள்ளவர்கள் கூறினார்கள். அதனால் தெரிந்து கொண்டேன். எனக்கு எதிரியை பார்த்தால் அடையாளம் தெரியும் அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில்லை. வாலிநோக்கம் போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

இல்லை.

ஒம்/–திருமதி.தங்ககார்த்திகா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
கடலாடி